Kanton Zürich
Bildungsdirektion
Volksschulamt

சூரிச் மாநில கல்வித்திணைக்களம் அடிப்படைக்கல்விக்காரியாலயம்

# பாலர்பாடசாலை ஆரம்பிப்பதற்கு நீண்டகாலத்திற்கு முன்பே கற்றல் ஆரம்பமாகின்றது

## பாலர்பாடசாலையிலிருந்து வகுப்பேற்றப்படும்போது சில பரிந்துரைகள்



tamilisch

நீங்கள் உங்கள் பிள்ளைகளை பாலர்பாடசாலைக்கும், அதனைத்தொடர்ந்து வரும் ஏனைய வகுப்புகளிற்கும் தயாராக்க விரும்புகின்றீர்களா?

அதற்கு அசாதாரணமாக ஒன்றும் தேவையில்லை: நீங்கள் உங்கள் பிள்ளைகளை விழிப்புணர்வுடன் வழிநடத்தி அவர்களிற்கு நாளாந்த நடைமுறைகளை அறியப்படுத்தினால் அதுவே அவர்களிற்கு உன்னதமான ஊக்குவிப்பாகும். இவ்வாறே பிள்ளைகள் முக்கியமான கற்றல் அனுபவங்களை சேகரிக்கின்றனர். இவை பின்னர் அவர்களது வளர்ச்சிக்கும், பாலர்பாடசாலை மற்றும் பாடசாலை என்பவற்றில் கற்பதற்கும் மிகவும் அவசியமானவை. அன்றாட குடும்பவாழ்வானது எவ்வாறு ஒவ்வொரு பிள்ளைக்கும் தலைசிறந்த கல்விக்கூடமாக அமையும் என்பதை www.kinder-4.ch என்ற இணையமுகவரியில் 40 குறும்பட உதாரணங்கள் காட்டுகின்றன. பொதுவாக பெற்றோர்கள் அவர்களது பிள்ளைகளிற்கு நேர்த்தியாக ஆதரவளிக்கின்றனர். ஆகையால் சில மேலதிக சிந்தனைக்குறிப்புகள் கீழே வழங்கப்பட்டுள்ளன.

நீங்கள் உங்கள் பிள்ளைகளின் வெற்றியில் அவர்களுடன் மகிழ்வதும், அவர்களின் வழியை ஊக்குவிப்பதும், அவர்களை தாமாகவே அதிகமாக செயற்படவும், அதனூடாக அனுபவ அறிவைப்பெற அனுமதிப்பதும் மிக முக்கியகாரணிகளாகும்.

| | |
|---|---|
| உரையாடல் | உங்கள் பிள்ளைகளுடன் நீங்கள் கலந்துரையாடுபவர்களா? நீங்கள் சிந்திக்கும் மொழியிலேயே உங்கள் பிள்ளைகளுடன் உரையாடுகின்றீர்களா? |
|  | பிள்ளைகளின் மொழியறிவானது அவர்களுடன் யாராவது உரையாடுவதன் மூலமாகவோ அல்லது அவர்களிற்கு கதைக்க சந்தர்ப்பமளிப்பதன் மூலமாகவோ வளருகின்றது. பெற்றோர் சரளமாக விளங்கும் மொழியினை அவர்களது பிள்ளைகள் கற்பதன் மூலம் அவர்கள் ஏனைய மொழிக்கற்கைக்கு ஒரு சிறந்த அடித்தளத்தை பெறுகின்றனர். ஒன்றிற்கு மேற்பட்ட தாய்மொழிகளாயின் எப்போது எந்த மொழி கதைக்கப்படும் என்பதை தெளிவான விதிமுறைகள் அமைப்பதன் மூலம் உரையாடலாம். |
| கேட்டல் | உங்கள் பிள்ளைகளுடன் நீங்கள் படத்துடன் கூடிய கதைப்புத்தகங்களை பார்த்தும் அவற்றை அவர்களிற்கு வாசித்துக்காட்டியும் அவர்களுடன் அதை கலந்துரையாடுபவர்களா? நீங்கள் அவர்களிற்கு நீதிக்கதைகள் மற்றும் ஏனைய கதைகள் சொல்லுபவர்களா? |
|  | கவனமாகக்கேட்டல் மற்றும் மனதை ஒருநிலைப்படுத்துதல் என்பன பாடசாலைக்கல்விக்கு மிக முக்கிய நிபந்தனைகளாகும். பிள்ளைகளிற்கு சிறுவயதிலேயே புத்தகங்கள், படங்கள் மற்றும் எழுத்துக்களை அறிதல் என்பவற்றில் ஆர்வமும் மகிழ்ச்சியும் இருந்தால் பின்பு அவை அவர்களிற்கு வாசித்தல் மற்றும் எழுதுதல் போன்றவற்றை மிக இலகுவாக்கும். |
| அறிந்துகொள்ளல் | அன்றாட வாழ்வில் பயன்படுத்தும் பொருட்களை (உ-ம்: தளபாடங்கள், உடைகள், கத்தி கரண்டிகள், உணவுப்பொருட்கள் போன்றன) கையால் தொடவும் அவற்றை எடுத்து அவற்றின் இயல்புகளை அறியவும் உங்கள் பிள்ளைகளை இயன்றளவு அனுமதிப்பதுண்டா? இவற்றின் பெயர்களைக்கூறி விளக்கமளிப்பதுண்டா? |
|  | பிள்ளைகள் உலகைப்பற்றி அறிவதற்கு மிகவும் ஆர்வமுள்ளவர்கள். அறிதல் என்பது இரு பொருள்படும்: விளங்குதல் மற்றும் தொட்டுணர்தல். |
| உருவமைத்தல் | நீங்கள் உங்கள் பிள்ளைகளை தண்ணீர், மண், இலைகள், பனிக்கட்டி, மண்வெட்டி, குப்பைவாரி, கிண்ணம் போன்றனவற்றுடன் விளையாட அனுமதிப்பதுண்டா? |
|  | பிள்ளைகள் இவ்வாறான விளையாட்டுக்களினூடாக (உ-ம்: கொட்டுதல், நிரப்புதல் மற்றும் உருவமைத்தல்) கணிதம் மற்றும் உபகரண அறிவுகளை சேகரித்துக்கொள்கின்றனர். |

### கட்டுதல்



நீங்கள் உங்கள் பிள்ளைகளை சிறுகட்டைகள், லேகோ, பெட்டிகள் என்பவற்றைக்கொண்டு கட்டவும், உருவம் அமைக்கவும் அனுமதிப்பதுண்டா?

இவற்றினூடாக பிள்ளைகள் உருவங்கள், பருமன் மற்றும் அளவுகள் போன்றவற்றை தெரிந்துகொள்வதுடன் அவற்றை இனங்காண்பார்கள்.

### வரைதல்



உங்கள் பிள்ளைகளிற்கு காகிதமும் வர்ணங்களும் கொடுத்து அவர்களை வரையவும், வடிவம் அமைக்கவும் அனுமதிப்பதுண்டா?

உங்கள் பிள்ளைகள் இதன் மூலம் கை, புயம் மற்றும் விரல் அசைவுகளை கற்கின்றனர். இவை பின்னர் அவர்கள் எழுதப்பழகுவதற்கு மிகவும் உதவிபுரிகின்றன.

### வடிவமைத்தல்



நீங்கள் உங்கள் பிள்ளைகளிற்கு காகிதம், துணி, காகிதப்பெட்டிகள், பசைநாடா, கத்தரிக்கோல், பசை போன்றவற்றை கொடுத்து அவர்களுடன் சேர்ந்து கைவினைகள் செய்வதுண்டா? அல்லது அவர்களை பிரத்தியேக-மாக இயங்குகின்ற கைவேலையுடன் கூடிய விளையாட்டிடங்களிற்கு (உ+ம்: கேக், பிஸ்கட் போன்றன செய்யுமிடங்கள்) அனுப்புவதுண்டா?

இவற்றின்மூலம் பிள்ளைகள் அவர்களது அசைவுகளை கட்டுப்படுத்த கற்றுக்கொள்வதுடன் தமது கற்பனைவளத்தை மேம்படுத்தவும் சிந்தித்து விளங்கிக்கொள்ளவும் முடியும்.

### கண்டுபிடித்தல்



நீங்கள் உங்கள் பிள்ளையுடன் வெளியில் சென்று இயற்கையை இரசிப்பதுண்டா? கடைக்கு, கைவேலை செய்யும் விளையாட்டிடங்களிற்கு அல்லது சலவையறைக்கு அவர்களையும் அழைத்துச் செல்வதுண்டா? அங்கு அவர்கள் பொருட்களைத் தொட்டுப் பயன்படுத்தி தம்மை ஒருமுறையாவது அழுக்காக்கவும் அனுமதிப்பதுண்டா?

உங்கள் பிள்ளை இவ்வாறான அனுபவங்கள் மூலமாக வெவ்வேறு பிரிவுகளில் தமது அறிவினை விருத்தியாக்குவதுடன் விதிமுறைகளை கடைப்பிடிக்கும் திறனையும் கற்றுக்கொள்கின்றது.

### தானாக செய்தல்



பிள்ளைகளை தாமாவே ஒரு விடயத்தை செய்ய அனுமதிப்பதுண்டா - சிலவேளை நீண்ட நேரமானாலோ அல்லது செய்யமுடியாது போனாலோ (உ+ம்: உடையணிதல், கழிவறைக்குச் செல்லுதல், மேசையை ஒழுங்கு செய்தல், அப்பிள் சீவுதல் போன்றவை)? பிள்ளைகளை தங்களது தீர்வு-வழிகளை தாமாகவே கண்டுபிடிக்க அவர்களை ஊக்குவித்து அவர்களின் தடங்கல்களைத் தாண்டிச்செல்ல உதவுங்கள்.

பிள்ளைகளிற்கு தாமே தமது பணிகளை செய்து முடிப்பதற்கு கால அவ-காசம் தேவைப்படுகின்றது. ஒரு விடயத்தை தானாகவே செய்து முடி-க்கும் திறனானது நாளாந்த பாடசாலை வாழ்க்கையை இலகுவாக்குவதுடன் தன்னம்பிக்கையையும் கொடுக்கும்.

### சேர்ந்து விளையாடல்



உங்கள் பிள்ளைகளிற்கு ஏனையவர்களுடன் கிரமமாக விளையாட சந்தர்ப்பங்கள் உள்ளதா?

பிள்ளைகள் சேர்ந்து விளையாடும்போது ஏனைய பிள்ளைகளிடமிருந்து அதிகமாக கற்றுக்கொள்ளும் வாய்ப்பு ஏற்படுகின்றது: மற்றயவர்களின் கருத்தினை புரிதல் மற்றும் தனது கருத்தினை வலியுறுத்தல், ஒருவரையொருவர் புரிந்துகொள்ளல் மற்றும் ஒருவருக்கொருவர் உதவுதல் போன்றன. இவை பின்வரும் காலங்களில் உங்கள் பிள்ளைகள் இன்னொரு வகுப்பில் சகஜமாக பழகுதல் மற்றும் தனக்கென ஒரு இடத்தை பிடித்தல் போன்றவற்றை இலகுவாக்க உதவுகின்றன.

## உங்கள் பிள்ளை பாலர்பாடசாலை செல்லும் போது எவ்வாறான அனுபவங்கள் உதவும்?

பாலர்பாடசாலைக்குச் செல்வதற்கு வயதெல்லையை விட வேறொரு தகைமைகளும் தேவையில்லை. எனினும் கீழேயுள்ள அனுபவங்களை அவர்கள் ஏற்கனவே பெற்றிருந்தால் அவை உங்கள் பிள்ளைகளிற்கு உதவும்:

- ஏனைய பிள்ளைகளுடன் விளையாடுதல், ஓடுதல், ஏறுதல் மற்றும் தனது சமநிலையைப்பேணுதல்,
- ஒரு சில மணித்தியாலங்கள் பெற்றோரைப் பிரிந்திருத்தல்,
- கத்தரிக்கோலினால் காகிதத்தை வெட்டுதல், எழுதுகருவிகள் மூலம் வரைதல் மற்றும் பசையால் ஒட்டுதல்,
- தானாகவே உடையணிதல் மற்றும் உடைகழற்றுதல்,
- தானாகவே கழிவறைக்குச் செல்லுதல்,
- கை மற்றும் வாய் கழுவுதல், பல் துலக்குதல், மூக்குத்துடைத்தல்,
- ஜேர்மன் மொழியில் இலகுவான வாக்கியங்களை விளங்குதல் மற்றும் கூறுபவற்றை செய்தல்,
- குறித்தளவு நேரம் ஒரே விடயத்தில் கவனம் செலுத்துவதுடன் அவ் விடயத்தில் மெய்மறந்து போதல்,
- உபகரணங்கள் மற்றும் உயிரினங்களினுடன் விழிப்புணர்வுடன் நடத்தல்,
- விளையாடி முடிந்தவுடன் விளையாடியவற்றை ஒழுங்காக அடுக்கிவைத்தல் - தேவையேற்படின் மற்றவர்களுடன் உதவியுடன்.

## கேள்விகள்?

உங்கள் பிள்ளையின் வளர்ச்சி பற்றிய கேள்விகள் அல்லது தெளிவின்மைகள் இருப்பின் தயவுசெய்து ஒரு துறைநிறுவனத்துடனோ (குயஉாளவநடடந) (ஊம்: குடும்ப ஆலோசனை மையம், குழந்தை மருத்துவர்), பாட-சாலை தலைமையாசியருடனோ அல்லது அவர்களின் சிறுவர்பாடசாலை ஆசிரியருடனோ அல்லது அவர்களின் விளையாட்டுக்குழுஆசிரியருடனோ தொடர்புகொள்ளுங்கள். வளர்ச்சியில் குறைபாடுகள் உள்ளதாக நீஙகள் உணர்ந்தால் தயவுசெய்து முற்கூட்டியே, அதாவது பாலர்பாடசாலைக்குச் செல்லுமுன்பாகவே பாலர்பாடசாலை ஆசிரியருடன் அல்லது தலைமையாசிரியருடன் கலந்துரையாடுங்கள். இவை மூலமாகவே ஆரம்பத்திலிருந்தே மிகச்சிறந்த உதவி உறுதியளிக்கப்படும்.

## மூலப்பிரதி

- «Lernen ist schon für kleine Kinder sehr wichtig!» (Flyer der Schule Buchs SG)

சூரிச் சிறுவர்பாடசாலை அமைப்பினதும் (VKZ) சூரிச் ஆசிரியர் அமைப்பினதும் (ZLV) ஆலோசனைகளின் அடிப்படையில் இது உருவாக்கம்பெற்றது.

VERBAND KINDERGARTEN ZÜRICH

ZLV Zürcher Lehrerinnen- und Lehrerverband

தை 2015

தொடர்புகளிற்கு:
Bildungsdirektion Kanton Zürich
Volksschulamt | Pädagogisches, Unterrichtsfragen
Telefon 043 259 22 62, E-Mail: unterrichtsfragen@vsa.zh.ch

004500